ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1922/26 - 2015 ජූලි මස 08 වැනි බදාදා - 2015.07.08
*1922/26 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 5/2011*

**2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசியப் பொதுவழிகள் சட்டம்**

11 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசியப் பொதுவழிகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் கபீர் ஹாஷீம் ஆகிய நான், 2015, யூன் 26 ஆந் திகதிய 1920/36 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளிப்படுத்தப்பட்ட கட்டளை மூலம் "கடுகதிப்பாதை" ஒன்றாகப் பெயர் குறிக்கப்பட்டதும், இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதுமான, தேசிய பெருந்தெருவை "பயன்படுத்துநர் கட்டணத் தேசிய பெருந்தெரு" ஒன்றாக இக்கட்டளை மூலம் குறிப்பிடுகின்றேன்.

வெளிச் சுற்றுவட்ட தேசிய பெருந்தெருவின் "கொட்டாவ- கொத்தலாவலப் பகுதியை (0.000 கி. மீ. தொடக்கம் 9.900 கி. மீ. வரை)" பயன்படுத்துநர் கட்டணத் தேசிய பெருந்தெரு ஒன்றாகப் பெயர் குறிக்கின்றதும், 2014, பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதிய 1850/33 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான மேற்கூறப்பட்ட சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையானது, அதன் கீழ்ச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

கபீர் ஹாஷீம்,
நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

பத்தரமுல்லை,
2015, யூலை 07.

**அட்டவணை**

பயன்படுத்துநர் கட்டணத் தேசிய பெருந்தெருவைக் கொண்டுள்ள இடப்பரப்பு

வெளிச் சுற்றுவட்ட தேசிய பெருந்தெருவின் கொட்டாவ - கடவத்தைப் பகுதி எனப் பெயர் குறிப்பிடப்பட்டதும், கடுகதிப்பாதையின் கொட்டாவ இடைமாற்றுப் பாதைக்கும் (0.000 கி.மீ.) கடவத்தை இடைமாற்றுப்பாதைக்கும் (19.245 கி.மீ.) இடையே அமைந்துள்ளதும், 19.245 கிலோ மீற்றர் நீளமும் 40.000- 75.000 மீற்றர் அகலமும் கொண்டதுமான வீதிப் பாகம்.

7 - 1083


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.